SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

# மாலை எக்ஸ்பிரஸ்

MAALAI EXPRESS

மாநிலம் பயனுற!

குரோதி வருடம் கார்த்திகை 10 | ஹிஜிரி 1446 ஜமாதுல் அல்வல் 22

• புதுச்சேரி • திங்கள்கிழமை, நவம்பர் 25, 2024 • வெளியூர்: 26-11-2024, செவ்வாய்க்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 • Volume - 10 • Issue - 138 • 6 பக்கம் • ரூ.6

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:-
98423 35007

## மழையை எதிர்கொள்ள அரசு தயார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்



**சென்னை, நவ. 25–**

சென்னை சோழிங்கநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட எழில் நகரில் மறுசீரமைக்கப்பட்ட மழலையர் பள்ளி வகுப்புகளை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். அதன் பின்னர் முதல்அமைச்சர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது;

நாடாளுமன்ற கூட்ட தொடரில் என்ன பேச வேண்டும் என்பது குறித்து எம்.பி.க்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தமிழகத்துக்கு தேவையான விஷயங்களை நாடாளுமன்றத்தில் பேசுவதில் எம்.பி.க்கள் கவனம் செலுத்துவார்கள்.

பருவமழையை எதிர்கொள்ள அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. மழை வருதோ வரவில்லையோ, அதனை எதிர்கொள்ள அரசு தயாராக உள்ளது. என்றார்.

அதானி விவாகரத்தில் தமிழக அரசு தனது நிலையை தெரிவிக்க வேண்டுமென ராமதாஸ் தெரிவித்தது குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு, "அரசியல் ரீதியாக ஒவ்வொரு நாளும் அறிக்கை வாயிலாக ராமதாஸ் பேசி வருகிறார். அதற்கு தற்போது பதிலளிக்க வேண்டிய அவசியம் இல்லை." என முதல்அமைச்சர் தெரிவித்தார்.

## வார தொடக்கத்தில் அதிரடியாக குறைந்த தங்கம் விலை

**சென்னை, நவ. 25–**

தங்கம் விலை மீண்டும் ஏறி வருகிறது. கடந்த 17ந்தேதி வரை அதன் விலை குறைந்து வந்து, இல்லத்தரசிகளுக்கு ஆறுதலை கொடுத்த நிலையில், தற்போது அதன் விலை 'கிடுகிடு'வென ஏறி வருகிறது.

கடந்த 17ந்தேதி ஒரு சவரன் ரூ.56 ஆயிரத்துக்கு கீழ் சென்றது. அதன் பின்னர் விலை அதிகரித்து 19ந்தேதி ரூ.56 ஆயிரத்தையும், 21ந்தேதி ரூ.57 ஆயிரத்தையும் தாண்டியது. இதன் தொடர்ச்சியாக தங்கம் விலை நேற்று முன்தினமும் அதிகரித்தது.

நேற்று முன்தினம் நிலவரப்படி, கிராமுக்கு ரூ.75ம், சவரனுக்கு ரூ.600ம் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.7 ஆயிரத்து 300க்கும், ஒரு சவரன் ரூ.58 ஆயிரத்து 400க்கும் விற்பனை ஆனது. கடந்த வாரம் மட்டும் சவரனுக்கு ரூ.2 ஆயிரத்து 920 உயர்ந்துள்ளது. இதன் மூலம் மீண்டும் தங்கம் விலை ரூ.58 ஆயிரத்தை தாண்டியுள்ளது.

இந்நிலையில் வார தொடக்கத்தில் தங்கம் விலை இன்று சவரனுக்கு ரூ. 800 அதிரடியாக குறைந்துள்ளது.

சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.800 குறைந்து ரூ.57 ஆயிரத்து 600க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.100 குறைந்து ரூ.7,200 க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையில் இன்று மாற்றம் இல்லை. வெள்ளி விலை ஒரு கிராம் ரூ.101க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## கனமழை எச்சரிக்கை: 9 துறைமுகங்களில் 1ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்

**சென்னை, நவ. 25–**

வங்கக் கடலில் உருவான காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப்பெற்றுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் நாகையில் இருந்து 880 கி.மீ. தூரத்தில் நிலை கொண்டுள்ளது என்றும் சென்னையின் தெற்கு தென்கிழக்கே 1,050 கி.மீ. துரத்தில் காற்றழுத்தத் தாழ்வு நிலை உள்ளது என்றும் வடமேற்காக தமிழ்நாடு இலங்கையை நோக்கி அடுத்த இரு நாட்களில் நகரும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

இதனால் இன்று கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும், உள் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், கடலூர், அரியலூர், சிவகங்கை புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்பு உள்ளது என்றும் வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் தமிழகத்தை நோக்கி காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் நெருங்கி வரும் நிலையில் சென்னை உள்ளிட்ட 9 துறைமுகங்களில் 1ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்பட்டுள்ளது.

இதன்படி சென்னை, கடலூர், நாகப்பட்டினம், எண்ணூர், காட்டுப்பள்ளி, பாம்பன், தூத்துக்குடி, புதுச்சேரி, கரைக்கால் துறைமுகங்களில் 1ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்பட்டுள்ளது.

# எதிர்க்கட்சிகள் கடும் அமளி

# நாடாளுமன்ற இரு அவைகளும் நாள் முழுவதும் ஒத்தி வைப்பு

## உயிரிழந்த முன்னாள் எம்.பி.க்களுக்கு இரங்கல் தீர்மானம்

**புதுடெல்லி, நவ. 25–**

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் மணிப்பூர் வன்முறை, அதானி விவகாரம் உள்ளிட்ட பிரச்னைகளை எதிர்க்கட்சிகள் எழுப்பின.

எதிர்க்கட்சிகள் தொடர் அமளி: மாநிலங்களவையைத் தொடர்ந்து மக்களவையும் நாள் முழுவதும் ஒத்தி வைப்பு நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் இன்று தொடங்கிய நிலையில், அதானி மீதான குற்றச்சாட்டு தொடர்பாக விவாதிக்கக்கோரி எதிர்க்கட்சிகள் முழுக்கமிட்டன. மேலும் உத்தரபிரதேசம் மற்றும் மணிப்பூரில் நிகழ்ந்த வன்முறை தொடர்பாக விவாதிக்கவும் எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்தன.

எதிர்க்கட்சிகள் தொடர் அமளி காரணமாக, மாநிலங்களவையைத் தொடர்ந்து மக்களவையும் நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டது.

இதனிடையே நாளை அரசியல் சாசன தினம் கொண்டாடப்படுவதால் இரு அவைகளின் வழக்கமான அமர்வுகள் நடைபெறாது. இதன்படி புதன்கிழமை காலை 11 மணிக்கு நாடாளுமன்ற இரு அவைகளும் கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் இன்று தொடங்கிய நிலையில், மாநிலங்களவைத் தலைவர் ஜெகதீப் தங்கர் தலைமை வகித்தார். அவை தொடங்கியது முதல் மணிப்பூர் வன்முறை, லஞ்ச வழக்கில் கவுதம் அதானிக்கு அமெரிக்க ஐகோர்ட்டு பிடிவாரன்ட் பிறப்பித்திருப்பது உள்ளிட்ட விவகாரங்களை முன்னிறுத்தி நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் ஜெகதீப் தங்கர் இன்று நாள் முழுவதும் அவையை ஒத்தி வைப்பதாக அறிவித்தார்.

வக்பு (திருத்த) மசோதா, 2024 இல் பல்வேறு பங்குதாரர்களின் கருத்துக்கள் நிலுவையில் இருப்பதால், கூட்டு நாடாளுமன்றக் குழுவின் (ஜேபிசி) பதவிக் காலத்தை நீட்டிக்குமாறு எதிர்க்கட்சி எம்.பி.க்கள் மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதுதொடர்பாக எதிர்க்கட்சி எம்.பி.க்கள் கையெழுத்திட்ட கடிதத்தில், "வக்பு திருத்த மசோதா, தற்போதுள்ள சட்டத்தில் பல பெரிய மாற்றங்களை உள்ளடக்கிய ஒரு விரிவான சட்டமாகும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த மாற்றங்கள் இந்தியாவின் மக்கள் தொகையில் பெரும் பகுதியை பாதிக்கும். எனவே, அறிக்கைஇறுதிசெய்யப்படுவதற்கு வெறும் மூன்று மாத கால அவகாசம் போதுமானதாக இல்லை என்பது மட்டுமல்லாமல், முறையற்ற பரிந்துரைகளையும் விளைவிக்கலாம்" என்று அதில்; தெரிவிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத் தொடர் தொடங்கியதும், உயிரிழந்த முன்னாள் எம்.பி.க்களுக்கு இரங்கல் தீர்மானம் வாசிக்கப்பட்டது. இதன்பின் அதானி விவகாரம், மணிப்பூர் கலவரம் போன்ற பல்வேறு விஷயங்களை முன்வைத்து எதிர்க்கட்சியினர் முழக்கம் எழுப்பியதால் மக்களவை 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.



எதிர்க்கட்சிகளின் கடும் அமளிக்கிடையே குளிர்கால கூட்டத்தொடர் தொடங்கியது

எதிர்க்கட்சிகளின் கடும் அமளிக்கிடையே நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் இன்று தொடங்கியது. அடுத்த மாதம் 20ம் தேதி வரை கூட்டத்தொடர் நடைபெற உள்ளது. அரசியலமைப்பு தினம் கொண்டாடப்படுவதால், மக்களவை, மாநிலங்களவை அமர்வுகள் நாளை நடைபெறாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக கூட்டத்தொடர் முழுவதும் சுமுகமாக நடைபெறுவதை உறுதி செய்யும் வகையில், அனைத்து கட்சி கூட்டத்துக்கு மத்திய அரசு நேற்று ஏற்பாடு செய்திருந்தது. நாடாளுமன்ற கட்டிடத்தில் உள்ள முதன்மை குழு அறையில் பாதுகாப்பு மந்திரி ராஜ்நாத் சிங் தலைமையில் இந்த கூட்டம் நடைபெற்றது. இதில், காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், தி.மு.க., சிவசேனா உள்ளிட்ட கட்சி பிரதிநிதிகள் பங்கேற்று தங்கள் கருத்துகளை முன்வைத்தனர்.

டிசம்பர் 20ந் தேதி வரை நடைபெறும் இந்த தொடரில் 16 மசோதாக்களை நிறைவேற்ற மத்திய அரசு பட்டியலிட்டு உள்ளது. இதில் முக்கியமாக, கடந்த கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ள வக்பு வாரிய திருத்த மசோதாவை குளிர்கால கூட்டத்தொடரில் நிறைவேற்ற அரசு தீவிரம் காட்டி வருகிறது.

எதிர்க்கட்சிகளால் கடும் எதிர்ப்பை சந்தித்த இந்த மசோதா, நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் பரிசீலனைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இந்த குழு, மசோதா தொடர்பான அறிக்கையை குளிர்கால கூட்டத்தொடரில் முதல் வாரத்தின் கடைசி நாளில் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயம் ஆகும். அதன்படி இந்த வாரமே அறிக்கை தாக்கல் செய்யப்படும் என தெரிகிறது.

இந்த மசோதாவை தவிர பஞ்சாப் கோர்ட்டுகள் (திருத்தம்) மசோதா, வணிக கப்பல் மசோதா, கடலோர கப்பல்கள் மசோதா, இந்திய துறைமுகங்கள் மசோதா உள்ளிட்ட மசோதாக்களும் நிறைவேற்ற திட்டமிடப்பட்டு உள்ளது.

மேலும் 202-4 25ம் நிதியாண்டுக்கான துணை மானிய கோரிக்கைகளின் முதல் பகுதியும் தாக்கல் செய்யப்பட்டு விவாதித்து நிறைவேற்றவும் பட்டியலிடப்பட்டு உள்ளது. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டம் தொடர்பான மசோதாக்கள் எதுவும் இந்த தொடருக்காக மத்திய அரசு பட்டியலிடவில்லை. எனினும் அந்த மசோதாவை வருகிற தொடரிலேயே தாக்கல் செய்ய அரசு திட்டமிட்டு உள்ளதாக தகவல்கள் வெளியாகி இருக்கிறது.

இந்த சூழலில், மணிப்பூர் வன்முறை, லஞ்ச வழக்கில் கவுதம் அதானிக்கு அமெரிக்க ஐகோர்ட்டு பிடிவாரன்ட் பிறப்பித்திருப்பது உள்ளிட்ட விவகாரங்களை முன்னிறுத்தி நாடாளுமன்றத்தில் குரல் எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

## புதுவையில் வாக்காளர் பட்டியல் திருத்த பணி சிறப்பு முகாமை ஆட்சியர் குலோத்துங்கன் ஆய்வு



வாக்காளர் பட்டியல் சுருக்குமுறை திருத்தம் செய்யும் பணி 1.1. 2025 என்ற தேதியை தகுதி பெறும் நாளாக கொண்டு பெயர் சேர்த்தல், பெயர் நீக்கல் மற்றும் திருத்தம் செய்யும் பணியானது வரைவு வாக்காளர் பட்டியலுடன் 29.10.2024 அன்று தொடங்கி நடைபெற்று கொண்டிருக்கிறது. மேலும் பணி வரும் 28.11.2024 வரை நடைபெறவிருக்கிறது. இந்த வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிக்கான சிறப்பு முகாம் புதுச்சேரியில் உள்ள அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் நடைபெற்று வருகின்றன. காமராஜர் நகர் தொகுதியில் நடந்த பணியை மாவட்ட தேர்தல் அதிகாரியும் புதுச்சேரி மாவட்ட ஆட்சியருமான குலோத்துங்கன் ஆய்வு மேற்கொண்டு பணிகளை பார்வையிட்டார். இதில் தேர்தல் பதிவு அதிகாரி சுரேஷ் ராஜ், உதவி தேர்தல் பதிவு அதிகாரி கோமளா ஆகியோர் பங்கேற்றனர்.

பிறவாமை அருளும் அகத்தியரின் ஆத்ம காயத்ரி மந்திரம்



ஓம் அகத்து ஈசாய வித்மஹே
கால ஹஸ்தாய தீமஹி
தந்நோ சர்வப் ப்ரசோதயாத்.

பொருள்: எனது ஆன்மாவே,நீபரமாத்மாவினை சென்றடைய வேண்டிய காலம் உதித்துள்ளது நீ விழிப்படைவாயாக...

தினமும் காலையும் மாலையும் குறைந்தது 27 முதல் 108 முறை 48 நாட்கள் உரைத்தால் கீழ்கண்ட பலன்கள் கிட்டும்..
உங்கள் வேண்டுதல் நிறைவேறும்

1) நோய்கள் குணமாகும் (மௌனமாக உரைத்தால்)
2) பிறவாமை நிலை சித்திக்கும் / கர்மவினைகள் கரையும் (ஓசையுடன் உரைத்தால்)
3) கணவன் மனைவி ஒற்றுமை குடும்ப அமைதி கிடைக்கும் (குடும்பத்தில் அனைவரும் சேர்ந்து உரைத்தால்)
4) உங்கள் உயிருக்கு உணவாகிறது; பிரபஞ்ச ஆற்றல் ஈர்க்கப்படும்.

பிரளய அழிவுகளிலிருந்து காக்கப்படுவீர்

9789032199 7996774757
www.anbaalayam.com

# கல்வி சார் சிறப்பு விருதுகள் வழங்கும் விழா



**தூத்துக்குடி, நவ. 25–**

தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு தாலுகா தெற்கு இலந்தைகுளம் பஞ்சாயத்து தலைவராக பணியாற்றும் செல்வி ரவிக்குமார் சமூக பணி, மக்களின் நலன் கருதி அறிவியல் ஆராய்ச்சியின் நோக்கில் சிறப்பாக செயல்பட்டற்கு உலகலாவிய அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் சார்பில் நடந்தப்பட்ட ஆய்வின்போது அவர் தேர்வு செய்யப்பட்டார். அவருக்கு திருநெல்வேலி தூய யோவான் கல்லூரியில் வைத்து நடைபெற்ற சமூக அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நடத்திய 2024 ஆண்டுக்கான உலகளாவிய கல்வி சார் சிறப்பு விருதுகள் வழங்கும் விழா நடைபெற்றது. இந்த விருதை ஜம்மு காஷ்மீர் கிளஸ்ஸ்டார் யூனிவேர்சிட்டியின் துணைவேந்தர் சந்திரா சேகரன் வழங்கினார். கலந்து கொண்டவர்கள் தூய யோவான் கல்லூரி முதல்வர் ஆண்ட்ரூஸ், சவேரியார் கல்லூரி முதல்வர் இன்னாசிமுத்து, சவுத் சோன் யூனிவர்சிட்டி முதுநிலை பேராசிரியர் குணா பாலன், மதுரை டலேடி டாக் கல்லூரி கல்லூரி முதல்வர் பியூலாஜெயசிரி, சமூக அறிவியல் ஆராய்ச்சி மைய நிறுவனத்தின் சேர்மன் டாக்டர் பரமசிவன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# தென்காசியில் பொதிகை புத்தக திருவிழா நிறைவு




**தென்காசி, நவ. 25–**

தென்காசி இ.சி.ஈஸ்வரன்பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலை பள்ளி வளாகத்தில் நடைபெற்ற 3 வது பொதிகை புத்தக திருவிழாவின் நிறைவு நாள் திருவிழா தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனிநாடார், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா ஆகியோர் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்ததாவது, 3வது பொதிகை புத்தகத்திருவிழாவின் நிறைவு நாள் விழா நிகழ்ச்சியாக கலை பண்பாட்டுத்துறையின் சார்பில் கலை நிகழ்ச்சிகளும், எழுத்தாளர் வீரசோழன் இலச்கிய சுரேஷ் பிரதீப் அவர்களின் இலக்கிய வாசிப்பு என்ன செய்யும்? என்ற தலைப்பில் சிறப்புரை, எழுத்தாளர் சுரேஷ் பிரதீப் அவர்களின் இலக்கிய விமர்சனமும், சமூக விமர்சனமும் என்ற தலைப்பில் சிறப்புரை, எழுத்தாளர் கீரனூர் ஜாகிர் ராஜா நான் ஒரு வாசகன் என்ற தலைப்பில் சிறப்புரை ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

மேலும் (23.11.2024) அன்று வரை புத்தகத்திருவிழாவில் 70,078 பள்ளி மாணவ, மாணவிகளும், 14,377 கல்லூரி மாணவ, மாணவிகளும், 1,52,571 பொதுமக்களும் என மொத்தம் 2,37,023 நபர்கள் புத்தகங்களை வாங்கி உள்ளனர். (15.11.2024) முதல் (23.11.2024) வரை ஒன்பது நாட்கள் ரூ.86,79,999 மதிப்பிலான புத்தகங்கள் விற்பனையாகி உள்ளது என தெரிவித்தார்.

தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனி நாடார் புத்தகததிருவிழாவில் அதிக அளவில் புத்தகங்களை வாங்கிய கீழப்புலியூர் வீரமாமுனிவர் ஆர்.சி. மேல்நிலைப் பள்ளிக்கு முதல் பரிசாக ரூ.15,000, ஆவுடையானூர் புனித அருளப்பர் மேல்நிலைப் பள்ளிக்கு இரண்டாம் பரிசாக ரூ.10,000 மற்றும் ஆவுடையானூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மூன்றாம் பரிசாக ரூ.5000 வழங்கினார். மாவட்ட நிர்வாகம் சார்பில் அதிக அளவில் புத்தகங்களை வாங்கிய 10 பள்ளிகளுக்கு தலா ரூ.3000 வழங்கப்பட்டது.

வருவாய்த்துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, பேரூராட்சிகள் மற்றும் பள்ளிக் கல்வித்துறை உள்ளிட்ட துறைகளில் சிறப்பாக பணியாற்றிய 200 அலுவலர்கள் மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு நற்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார்.

இப்புத்தகத்திருவிழாவில், தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த புகழ் பெற்ற எழுத்தாளர்கள் செல்லம்மாள் பாரதி, ரசிகமணி டி.கே.சி, தேவநேயப்பாவாணர், சாகித்ய அகாடமி விருதாளர்கள் சு. சமுத்திரம், ஆ.மாதவன், மா.லெ. தங்கப்பா, கவிஞர் விக்கிரமாதித்யன், கலாப்ரியா, கழனியூரன் உள்ளிட்ட 48 எழுத்தாளர்களின் சிறுகதைகளும், கட்டுரைகளும் அடங்கிய தொகுப்பு மாவட்ட நிர்வாகம் சார்பில் செய்தி மலராக வெளியிடப்பட்டது. இதில் பல இளம்படைப்பாளர்களின் கதைகளும் இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், உதவி ஆணையர் (கலால்) பா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மு.அமிர்தலிங்கம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் இரா.சண்முகசுந்தரம், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) ரா. ராமசுப்பிரமணியன் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# முரசொலி மாறன் நினைவு நாள்



**சேலம், நவ. 25–**

தமிழ்நாடு முன்னாள் வேளாண்மைத்துறை அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் மற்றும் முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் நினைவு நாளையொட்டி பூலாவரி கிளைக் கழக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்திய பின்பு நினைவிடம் வரை அமைதி ஊர்வலமாக சென்றனர். தமிழ்நாடு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. ராஜேந்திரன் தலைமையில் சேலம் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எஸ் ஆர் சிவலிங்கம் முன்னிலையில் மற்றும் சேலம் மாநகராட்சி மேயர் ராமசந்திரன், சேலம் கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மருத்துவர் வீரபாண்டி ஆ.பிரபு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கோபால், சின்னதுரை, தமிழ்ச்செல்வன், ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக பேச்சாளர்கள், தோழமைக்கட்சி, மாற்றுக்கட்சி நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள், இளைஞரணி நிர்வாகிகள், தோழர்கள் என பெரும்பாலானோர் நினைவிடத்தில் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தினர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# அலைடு ஹெல்த் சயின்ஸ் துறை சார்பில் பிட் இந்தியா வாரம் கொண்டாட்டம்




**சேலம், நவ. 25–**

விநாயகம் மிஷின் மருத்துவமனை வளாகத்தில் உள்ள அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையின் சார்பில் பிட் இந்தியா இயக்கத்தின் மூலம் பிட் இந்தியா வாரம் கொண்டாடப்பட்டது.

உடல் ஆரோக்கியத்தின் அவசியத்தை பொதுமக்களுக்கு வலியுறுத்தும் விதமாக இந்திய அரசால் பிட் இந்திய இயக்கம் தொடங்கப்பட்டது. இவ்வியக்கத்தின் கீழ் பிட் இந்திய வாரம் ஆனது அனைத்து உயர்கல்வி நிறுவனங்களும் கடைபிடிக்குமாறு பல்கலைக்கழக மானிய குழுவின் மூலம் வலியுறுத்தப்பட்டது.

இவ்வலியுறுத்தலின்படி விநாயகா மிஷனின் விம்ஸ் மருத்துவமனை வளாகத்தில் உள்ள அலைடு சயின்ஸ் துறையின் இளைஞர் நல அமைப்பின் மூலம் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சியின் அவசியத்தை வலியுறுத்தும் விதமாக பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட்டது. நிகழ்ச்சியினை துறையின் டீன் பேராசிரியர் டாக்டர் செந்தில்குமார் முன்னிலை வகித்து தொடக்கி வைத்தார். கபடி, கோ கோ போன்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் மாணவர்களுக்கு நடத்தப்பட்டன. துறையை சேர்ந்த மாணவர்கள் இப்போட்டிகளில் ஆர்வமுடன் பங்கேற்று தங்களின் விளையாட்டுத் திறனை வெளிப்படுத்தினர். வெற்றிபெற்ற அணிகளுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. இதற்கான அனைத்து ஏற்பாட்டினையும் துறையின் நாட்டு நலபணி திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் தனசேகர் மற்றும் இளைஞர் நல அமைப்பின் தலைவர் மெய்பிரபு மற்றும் தமிழரசி ஆண்டனி காட்ஸன் ஆகியோர் செய்திருந்தனர்.

# காரைக்கால் நிரவி பகுதியில் நீர்நிலை ஆக்கிரமிப்புகள் விரைவில் அகற்றப்படும்

## மாவட்ட கலெக்டர் மணிகண்டன் அறிவிப்பு



**காரைக்கால், நவ. 25–**

காரைக்கால் நிரவி பகுதியில் நீர்நிலை ஆக்கிரமிப்புகள் விரைவில் அகற்றப்படும். என, மாவட்ட கலெக்டர் மணிகண்டன் அறிவித்துள்ளார்.

காரைக்காலை அடுத்த நிரவி கொம்யூன் பஞ்சாயத்துக்கு உட்பட்ட பகுதிகளில் துப்புரவு பணிகள் சரிவர மேற்கொள்ளப்படவில்லை என மாவட்ட கலெக்டருக்கு அப்பகுதி பொதுமக்களிடம் இருந்து வந்த தொடர் புகாரையடுத்து, கலெக்டர் மணிகண்டன், நிரவி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் நேற்று முன்தினம் சைக்கிளில் சென்று தனியார் துப்புரவு தொழிலாளர்கள் மூலம் சரிவர தூய்மை பணி நடைபெறுகிறதா என்பது குறித்து ஆய்வு செய்தார். ஆய்வின்போது, கலெக்டர் மணிகண்டனிடம் அப்பகுதி பொதுமக்கள், சுப்பையா நகர் எல்.ஜிஆர் பிளாட்டுக்கள், பொட்ட வாய்க்கால், சிற்பி வாய்க்கால், சுப்பையா நகர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள நீர் நிலைகள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

தொடர்ந்து, மேற்கண்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொண்ட கலெக்டர் மணிகண்டன், ஓரிரு நாட்களில், வருவாய் துணை மாவட்ட ஆட்சியர் தலைமையில், வட்டாட்சியர் கொண்ட நில அளவையர் அதிகாரிகள், பொதுப்பணித்துறை மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து அதிகாரிகள் கொண்ட குழுவை கொண்டு மறு கள ஆய்வு செய்து ஆக்கிரமிப்புகள் இருக்கும் பட்சத்தில் சுப்ரீம் கோர்ட் மற்றும் ஹைகோர்ட் வழிகாட்டுதலின் அடிப்படையில், நீர்நிலை ஆக்கிரமிப்புகள் விரைவில் அகற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பொதுமக்களிடம் கலெக்டர் உறுதியளித்தார்.

தொடர்ந்து அப்பகுதியில் செயல்பட்டு வரும் குழந்தைகள் அங்கன்வாடி மைய கட்டிடத்தை ஆய்வு செய்த கலெக்டர் மணிகண்டன், கட்டிடத்தை சுற்றி கருவேல மரங்கள் வளர்ந்தும் புதர்கள் மண்டியும் இருப்பதால், குழந்தைகளுக்கு பாதுகாப்பற்ற சூழல் உண்டாகும். எனவே பொதுப்பணித்துறை மூலம் கருவேல மரங்களை அகற்றக்கோரி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். அறிவுறுத்தினார். தொடர்ந்து, நிரவி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் கலெக்டர் ஆய்வு மேற்கொண்டார்.

## தலையங்கம்

மாலை எக்ஸ்பிரஸ்
25.11.2024 (திங்கள்கிழமை)

# வெற்றிக்கு முக்கிய காரணம்

இந்தியாவில் உள்ள மராட்டியம், ஜார்கண்ட் மாநிலங்களில் நடந்து முடிந்த சட்டசபை தேர்தல், கேரளா, கர்நாடகம், உத்தரபிரதேசம் உள்பட 15 மாநிலங்களில் காலியாக உள்ள 2 மக்களவை தொகுதிகள் மற்றும் 48 சட்டசபை தொகுதி இடைத்தேர்தல்களின் முடிவுகள் பல அதிர்ச்சிகளையும், பல கேள்விகளுக்கு விடை தந்துள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் அரசியல் ரீதியாக பல மாற்றங்களைக்கண்ட மராட்டிய மாநிலம், 3 முதல் மந்திரிகளால் ஆளப்பட்டது. முதலில் பா.ஜனதா கட்சியை சேர்ந்த தேவேந்திர பட்னாவிஸ், அடுத்து நடந்த அரசியல் மாற்றங்களால் சிவசேனாவின் உத்தவ் தாக்கரே, கடைசியாக ஏக்நாத் ஷிண்டே ஆகியோர் முதல்மந்திரிகளாக இருந்தனர்.

அந்த மாநிலத்தில் பெரிய கட்சிகளாக வலம்வந்த சிவசேனாவும், தேசியவாத காங்கிரசும் பிளவுபட்டன. சிவசேனா உடைந்து, உத்தவ் தாக்கரே தலைமையில் ஒரு அணியும், ஏக்நாத் ஷிண்டே தலைமையில் மற்றொரு அணியும் இயங்கிவருகிறது. இதுபோல, சரத்பவார் தலைமையில் இயங்கிவந்த தேசியவாத காங்கிரஸ் கட்சியும் பிளவுபட்டு, சரத்பவாரின் அண்ணன் மகனான அஜித்பவார் தலைமையில் ஒரு அணி இயங்குகிறது. இதில் ஆச்சரியம் என்னவென்றால், இரு கட்சிகளிலுமே பிளவுபட்ட அணிகளே தேர்தல் கமிஷனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஆக, இந்தத் தேர்தலில் எந்த அணி வெற்றி பெறுகிறதோ, அந்த அணியின் தலைமையில் இயங்கும் கட்சிதான் உண்மையான கட்சி என்றும், தோல்வி அடையும் கட்சி அரசியல் அரங்கில் மங்கிப்போகலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

மொத்தத்தில், ஆட்சி யார் பக்கம்? என்பதோடு, கட்சி யார் பக்கம்? என்பதையும் இந்த தேர்தல் முடிவு காட்டிவிட்டது. இந்த தேர்தலில், பா.ஜனதா, ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவசேனா, அஜித்பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரசின் 'மகா யுதி' கூட்டணியும், காங்கிரஸ், சரத்பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ், உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவசேனா ஆகிய கட்சிகளைக்கொண்ட 'மகா விகாஸ் அகாடி' கூட்டணியும் போட்டியிட்டன. 6 மாதங்களுக்கு முன்பு நடந்த நாடாளுமன்ற தேர்தலிலும் இதே கூட்டணிகள்தான் மோதின. அப்போது, 'மகா விகாஸ் அகாடி' கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெற்றதால், அந்த வெற்றியே இந்த தேர்தலிலும் எதிரொலிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், தேர்தல் முடிவுகள் தலைகீழாக அமைந்துவிட்டன. மொத்தமுள்ள 288 தொகுதிகளில் 'மகா யுதி' கூட்டணி 235 இடங்களில் வெற்றி பெற்று சாதனை புரிந்துள்ளது. 'மகா விகாஸ் அகாடி' கூட்டணி 50 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. பா.ஜனதா அணி வெற்றி பெற்றதற்கு அரசியல் ரீதியாக பல்வேறு காரணங்கள் சொல்லப்பட்டாலும், தமிழ்நாடு வழிகாட்டிய மகளிர் உரிமைத்தொகை என்ற அன்பு சகோதரி திட்டமும், தேர்தல் அறிக்கையில் அளித்த விவசாயிகள் கடன் ரத்து வாக்குறுதியுமே முக்கிய காரணமாக கருதப்படுகிறது. தமிழரான பா.ஜனதா வேட்பாளர் கேப்டன் தமிழ்செல்வன் சயான் கோலிவாடா தொகுதியில் இருந்து 3வது முறையாக வெற்றி பெற்றுள்ளது மிகவும் பெருமைக்குரிய ஒன்றாகும்.

இதுபோல, ஜார்கண்ட் மாநிலத்தில் முதல் மந்திரியாக இருந்த ஹேமந்த் சோரன் 5 மாதங்கள் சிறையில் இருந்து வெளியேவந்து போட்டியிட்டாலும், அவருடைய கட்சியான ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா மற்றும் காங்கிரஸ் கூட்டணி மொத்தமுள்ள 81 தொகுதிகளில் 56 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியை தக்கவைத்து கொண்டுள்ளது. பா.ஜனதா கூட்டணி 24 இடங்களில்தான் வெற்றி பெற்றுள்ளது.

# அபயம் தொண்டு நிறுவனம் மாணவர்களுக்கு கணினி வழங்கல்




புதுச்சேரி அருகே உழந்தைக் கீரப்பாளையம் அரசு நடுநிலைப் பள்ளிக்கு அபயம் தொண்டு நிறுவனம் சார்பில் நிறுவனர் கலைமாமணி முனைவர் சுந்தரமுருகன், திருநாவுக்கரசு ஆகியோர் மாணவர்களின் பயன்பாட்டுக்காக கணினி வழங்கினர். இதில் மாரியப்பன் அறக்கட்டளை நிறுவனர் மாரியப்பன், முகமது சக்கரை, இளநிலை பொறியாளர் வெங்கடேஸ்வரன், தலைமை ஆசிரியை டார்லிங் இந்திரா, ஆசிரியர் தினகர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ‘ட்ரெக் தமிழ்நாடு’ என்பதை பிரபலப்படுத்த

# குற்றாலம் செண்பகாதேவி அருவி பகுதியில் ஆட்சியர், எஸ்பி மலையேற்றம்



**தென்காசி, நவ. 25-**

தென்காசி மாவட்டம் குற்றாலம் சிறப்பு நிலை பேரூராட்சிக்குட்பட்ட செண்பகா தேவி அருவியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாசன் ஆகியோர் ‘ட்ரெக் தமிழ்நாடு’ என்பதனை பிரபலப் படுத்தும் முயற்சியாக மலையேற்றம் மேற்கொண்டனர்.

தமிழ்நாடு வன அனுபவக் கழகம் மற்றும் தமிழ்நாடு வனத்துறை இணைந்து மலையேற்றப்பாதைக்கு உகந்த பாதைகளாக தமிழ்நாட்டில் முதல்கட்டமாக 40 பாதை களைத் தேர்ந்தெடுத்து அவற்றில் மலையேற றப்பயணங்களை நடத்த முடிவெடுத் துள்ளது. தென்காசி மாவட்டத்தில் செண்பகாதேவி அருவி மலையேற்றத்திற்கு உகந்த பகுதியாக வனத்துறை தேர்ந் தெடுத்துள்ளது. தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் மேற்குத் தொடர்ச்சிமலை அடிவாரத்தில் செண்பகாதேவி அருவி உள்ளது.இந்த நீர்வீழ்ச்சி தென்காசியிலிருந்து 6.6 கிலோமீட்டர் தொலைவில் அமைந் துள்ளது. காடு வழியாக ஏறக்குறைய 45 நிமிடங்களுக்கு எளிய மலையேற்றம் செய்யலாம். நீர்வீழ்ச்சிக்கு செல்லும் பாதையில் பழங்கால கல்வெட்டுகள் உள்ளன. இந்த நீர்வீழ்ச்சி 42 அடி உயரத் திலிருந்து கீழே விழுகிறது. அருவியைச்சுற்றி செண்பக மரங்கள் நிறைந்துள்ளன. அதன் அருகில் செண்பகாதேவி அம்மன் கோவில் அமைந்துள்ளது.

செண்பகாதேவி அருவி பகுதிக்கு பொதுமக்கள் மலையேற்றம் செல்ல வேண்டுமெனில் www.trektamilnadu.com <http://www.trektamilnadu.com> என்ற இணையதளத்தில் முன்பதிவு செய்து மலையேற்றம் செல்லலாம். பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட அனைவரும் முன் பதிவு செய்ய அனுமதிக்கப்படுவார்கள். 10 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகள் பெற்றோர் அல்லது பாதுகாவலர் துணை யோடு அனுமதிக்கப்படுவார்கள். முன்பதிவுக் கட்டணம் 699 மற்றும் 5%ஜி,எஸ்,டி வரி விதிக்கப்படும். மலையேற்றத்திற்கு வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை அனுமதி இல்லை. எனவே, மலையேற்றத்தில் ஆர்வமுள்ள வர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி மலையேற்றம் செய்யலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்துள்ளார்.

இம்மலையேற்றத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், உதவி ஆணையர் (கலால்) பா.ராமச்சந் திரன், வனச்சரக அலுவலர் சீதாராமன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) ரா.ராமசுப்பிரமணியன் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் ஆர்வமுடன் கலந்துகொண்டனர்.

# வேலூரில் புதிய கண் மருத்துவமனையைத் தொடங்கும் டாக்டர் அகர்வால்ஸ் கண் மருத்துவமனை குழுமம்




**வேலூர், நவ. 25-**

இந்தியாவில் கண் சிகிச்சை மற்றும் பராமரிப் பிற்கான மருத்துவ மையங் களை கொண்ட முன்னணி சங்கிலித்தொடர் நிறுவன மான டாக்டர். அகர்வால்ஸ் கண் மருத்துவமனை குழுமம், வேலூர் மாநகரில் சிறப்பான உட்கட்டமைப்பு வசதி மற்றும் சாதனங்கள் நிறுவப் பட்ட அதன் புதிய மருத்துவ மனையை தொடங்கி யிருக்கிறது. வேலூர் சட்டமன்ற தொகுதியின் உறுப்பினர் கார்த்திகேயன், நடைபெற்ற சிறப்பான நிகழ்ச்சியில் இப்புதிய மருத்துவமனையை திறந்து வைத்தார். வேலூர் மாநக ராட்சியின் மேயர் சுஜாதா ஆனந்தகுமார் கௌரவ விருந்தினராக இந்நிகழ்வில் முன்னிலை வகித்தார்.

வேலூரின் வலசா தெருவில், 10,000 சதுர அடி என்ற மிகப்பெரிய பரப்பளவில் அமைந்திருக்கும் இந்த மருத்துவமனையில் திறன்மிக்க நோயறிதல் சேவைகள் மற்றும் சிகிச்சையை வழங்க தேவையான மிக நவீன சாதனங்களும், வசதி அம்சங்களும் நிறுவப்பட்டி ருக்கின்றன. 20 மருத்துவர்கள், 50 நபர்களை உள்ளடக்கிய துணை மருத்துவப் பணியாளர்கள் மற்றும் பிற பணியாளர்களை உள்ளடக்கிய குழு இம்மருத்துவமனையில் சேவைகளை வழங்கும். ஒரு மாடுலர் அறுவைசிகிச்சை அரங்கு, கண்புரை, கண் அழுத்தம், விழித்திரை நோய்கள், நீரிழிவு சார்ந்த விழித்திரைக் கோளாறு, குழந்தைகளுக்கான கண் சிகிச்சை, கருவிழி பராமரிப்பு ஆகியவை களுக்கான சிறப்பு பிரிவுகள் மற்றும் மருத்துவமனையிலேயே இயங்கும் ஒரு மருந்தகம் ஆகியவற்றின் மூலம் கண் பராமரிப்பு தொடர்பான அனைத்து தேவைகளையும் இம்மருத்துவமனை பூர்த்தி செய்யும். புதிய மருத்துவமனை தொடக்கத்தை அர்த்தமுள்ள முறையில் கொண்டாடி மகிழும் நோக்கத்தோடு, 2024 டிசம்பர் 31ம் தேதி வரை அனைத்து வயது பிரிவுகளையும் சேர்ந்த மக்களுக்கு இலவச மருத்துவ கலந்தாலோ சனைகளை இம்மருத்துவமனை வழங்குகிறது.

மருத்துவமனை திறப்பு விழா நிகழ்ச்சியில் உரையாற்றிய வேலூர் சட்டமன்ற தொகுதியின் உறுப்பி னர் கார்த்திகேயன், “கண் சிகிச்சை யில் மிக உயர்தர சேவைகளை வழங்குவதில் இந்த மருத்துவமனை முதலிடத்தில் உள்ளது. மக்கள் இம்மருத்து வ மனையின் சேவை யைப் பயன்படுத்தி, தங்களது கண்களை குறித்த காலஅளவுகளில் பரிசோதித்து, கண்களைப் பாதுகாக்க வேண்டுமென நான் அனைவரையும் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.” என்று கூறினார்.

டாக்டர். அகர்வால்ஸ் கண் மருத்துவமனை, வேலூர் மருத்துவ சேவைகளுக்கான பிராந்திய தலைவர் டாக்டர். ஐசக் ஆப்ரஹாம் ராய் கூறியதாவது: “கண் பரா மரிப்பில் முழுமையான சேவை களை உலகத்தரத்தில் வழங்குவதற்கு நவீன தொழில்நுட் பத்தின் பின்புல ஆதரவோடு அதிக திறன் வாய்ந்த மருத்துவர்கள், துணை மருத்துவப் பணியாளர்கள் மற்றும் பிற ஆதரவு பணியாளர்களின் அர்ப்பணிப்பு மிக்க குழு இப்புதிய மருத்துவ மனையில் சேவைகளை வழங்கும். பார்வை குறைபாடுகள், கரு விழி பாதிப்புகள், கண்புரை நோய், கண் அழுத்த நோய் உட்பட அனைத்து வகையான கண் பாதிப்பு நிலைகளுக்கு சிகிச்சையளிக்க அனுபவமும், திறனும் கொண்டதாக இக்குழு இயங்குகிறது. அகர்வால்ஸ் குழுமம் செயலாற்றும் பல்வேறு அமைவிடங்களில் நாங்கள் செய்திருப்பதைப் போலவே, எமது இந்த புதிய மருத்துவ மனையிலும் எமது நோயாளிகளின் ஆழமான நம்பிக்கையை நிச்சயமாக பெறுவோம் என்று நாங்கள் நம்புகிறோம். எமது உயர்தர சேவைகளை வழங்குவதை ஆவலோடு எதிர்நோக்கு கிறோம்.”

டாக்டர். அகர்வால்ஸ் கண் மருத்துவமனை, வேலூர் மருத்துவ சேவைகளுக்கான மண்டல தலைவர் டாக்டர். கலா தேவி பேசுகையில், “மிகச்சிறப்பான கண் பராமரிப்பு சேவைகளை எமது நோயாளிகள் பெறுவதை உறுதிசெய்ய உயர்தர மருத்துவ சேவையை வழங்குவதில் எமது மருத்துவமனை தளராத பொறுப் புறுதி கொண் டிருக்கிறது. கண் மருத்துவர்கள், பார்வைத்திறன் அளவீட்டாளர்கள், மருந்தாளுனர் கள், ஆய்வக தொழில்நுட்ப பணி யாளர்கள், நோயாளி பராமரிப்பு சேவை வழங்குனர்கள் ஆகியோரின் அர்ப்பணிப்பு மிக்க செயற்பணியின் மூலம் பெரிய மற்றும் சிக்கலான கண் பார்வை பிரச்சனைகளுக்கும் முழுமையான மதிப்பாய்வு மற்றும் சிகிச்சை சேவைகளுக்கான வாக் குறுதியை இப்புதிய மருத்துவமனை வழங்குகிறது.” என்று கூறினார்.

# இல்லத்தரசிகளுக்கு இலவச வேலை வாய்ப்பு பயிற்சி துவக்க விழா

## முன்னாள் கவர்னர் தமிழிசை பங்கேற்பு



**தென்காசி, நவ. 25-**

தென்காசி மாவட்டம் சங்கரன் கோவிலில் வாய்ஸ் ஆப் தமிழ்நாடு பவுண்டேஷன் சார்பில் ஷரத்தா மானு பவுண்டேஷன் இணைந்து நடைபெற்ற பட்டதாரி இல்லத்தரசிகளுக்கு இலவச வேலை வாய்ப்பு பயிற்சி துவக்க விழா மற்றும் வாய்ஸ் ஆப் தமிழ்நாடு பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள் அங்கீகார விழா நடைபெற்றது. விழாவில் சிறப்பு விருந்தினர்களாக தெலுங்கானா புதுச்சேரி முன்னாள் ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன், ஷோகோ கார்ப்பரேஷன் சிஇஓ ஸ்ரீதர் வேம்பு ஷ்ரத்தா மானு பவுண்டேஷன் நிறுவனர் மதுமதி நாராயணன் கலந்து கொண்டனர். சங்கரன்கோவிலுக்கு வருகை தந்த முன்னாள் ஆளுநர் டாக்டர் தமிழிசை சவுந்திரராஜனுக்கு வாய்ஸ் ஆப் தமிழ்நாடு பவுண்டேஷன் சார்பில் பட்டாசு வெடித்து தாரை தப்பட்டம் முழங்க பூங்கொத்து வழங்கி சால்வை அணிவித்து சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் வாய்ஸ் ஆப் தமிழ்நாடு பவுண்டேஷன் சேவையை தமிழிசை பாராட்டி பேசினார். மேலும் தமிழக முழுவதும் வாய்ஸ் ஆப் பவுண்டேஷன் பணி சிறக்க வாழ்த்துக்கள் கூறினார்.

டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் மற்றும் விருந்தினர்கள் ஷோகோ கார்ப்பரேட் சி இ ஓ ஸ்ரீதர் வேம்பு சென்னை ஷரத்தா மானு பவுண்டேஷன் நிறுவனர் மதுமதி நாராயணன் ஆகியோருக்கும் வாய்ஸ் ஆப் தமிழ்நாடு பவுண்டேஷன் சார்பில் நிறுவனர் ஆனந்தன் அய்யா சாமி நினைவுப் பரிசுகள் வழங்கினார். ஷோகோ கார்ப்பரேட் சிஇஓ ஸ்ரீதர் வேம்பு ஷரத்தா மானு பவுண்டேஷன் நிறுவனர் மதுமதி நாராயணன் வாய்ஸ் ஆப் தமிழ்நாடு பவுண்டேஷன் நிறுவனர் ஆனந்தன் அய்யா சாமி, சமுத்திரா செந்தில், ஆகியோர் உரையாற்றினார்கள். மற்றும் மீனா, சிதம்பரம் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியை காவியா விஸ்வபிரியா தொகுத்து வழங்கினர்.

ஏற்பாடுகளை வாய்ஸ் ஆப் பவுண்டேஷன் தமிழ்நாடு நிறுவனர் ஆனந்தன் அய்யா சாமி ஆலோசனைப்படி பவுண்டேஷன் பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள், சிறப்பாக செய்திருந்தனர். பவுண்டேஷன் தலைமை நிர்வாக அதிகாரி காருண்யா குணவதி நன்றி கூறினார்.

# மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை மீன்வளத்துறை அறிவிப்பு

**புதுச்சேரி, நவ. 25-**

புதுச்சேரி மீனவர்கள் கடலில் மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என மீன்வளத் துறை இயக்குனர் (பொ) தெய்வசிகாமணி தெரிவித் துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது, சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் விடுத்துள்ள அறிக்கையின் படி, தெற்கு வங்கக் கடல் பகுதிகளில் உருவாக்கக் கூடிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக நாளை (26ம் தேதி) தமிழகம், புதுச்சேரி கடலோரப் பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 35 முதல் 45 கி.மீ., வேகத்திலும், இடையிடையே 55 கி.மீ., வேகத்திலும் வீசும், 27, 28ம் தேதி, தமிழக புதுச்சேரி கடலோரப் பகுதிகளில் சூறாவளிக் காற்று மணிக்கு 55 முதல் 65 கி.மீ., வேகத்திலும், இடை யிடையே 75 கி.மீ., வேகத்திலும் வீசக்கூடும் என்பதால், புதுச்சேரி பகுதி மீனவர்கள் யாரும் ஆழ்கடல் பகுதிகளில் மீன்பிடிக்க செல்வதை தவிர்க்குமாறும் நாளை (26ம் தேதி) முதல் மறு அறிவிப்பு வரும் வரை மீனவர்கள் யாரும் கடலுக்கு மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப் படுகிறது.

மேலும் கடலில் உள்ள விசைப்படகுகள் அனைத்தும் இன்று 25ம் தேதிக்குள் கரை திரும்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# புதுச்சேரி கோகோ அணி உத்தரபிரதேசம் பயணம்



**புதுச்சேரி, நவ. 25-**

உத்தர் பிரதேசம் அலிஹர் என்னும் இடத்தில் நடைபெற உள்ள 43வது ஜூனியர் நேஷனல் கோகோ சாம்பியன்ஷிப் 202425 போட்டியில் கலந்து கொண்டு விளையாட புதுச்சேரி சிறுவர் மற்றும் சிறுமியர் அணிகள் இன்று புறப்பட்டு சென்றார்கள்.

சங்க செயலாளர் முத்துகிருஷ்ணன் தலைமையில் சிறுமியர் அணி பயிற்சியாளராக சீனிவாசன் மேலாளர் நிவேதா, சிறுவர்கள் அணியின் பயிற்சியாளராக ஏழுமலை, மேலாளர்களாக விக்னேஷ் மற்றும் நடுவராக பாக்கியலட்சுமி ஆகியோர் அணியுடன் சென்றுள்ளார்கள்.

முன்னதாக புதுச்சேரி காவல்துறை துணை ஆய்வாளர் மலையன் சீருடை வழங்கி விளையாட்டு வீராங்கனைகளை வாழ்த்தி வழி அனுப்பி வைத்தார். சங்க செயற்குழு உறுப்பினர் ராம்மோகன், மூத்த தேசிய விளையாட்டு வீரர் கண்ணன், உடற்கல்வி ஆசிரியர்கள் ஜவகர் பத்மநாபன் மற்றும் துரை ஆகியோர் உடன் இருந்தார்கள்.

# முன்னாள் ராணுவ வீரர்கள் நலச்சங்க ஆண்டு விழா

## சபாநாயகர் செல்வம் பங்கேற்பு



**புதுச்சேரி, நவ. 25-**

புதுச்சேரி முப்படை முன்னாள் ராணுவ வீரர்கள் மற்றும் வீரத் தாய்மார்கள் நலச்சங்கம் சார்பில் முதலாம் ஆண்டு விழா நேற்று நடந்தது.

லாஸ்பேட்டை விவேகானந்தா மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடந்த விழாவிற்கு, தலைவர் மோகன் வரவேற்றார். விழாவில் சபாநாயகர் செல்வம் கலந்து கொண்டு முன்னாள் ராணுவ வீரர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

விழாவில், எம்.எல்.ஏ.,க்கள் வைத்தியநாதன், அசோக்பாபு ஆகியோர் பங்கேற்று வாழ்த்தி பேசினர். சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், முன்னாள் ராணுவ வீரர்கள் உட்பட கலந்து கொண்டனர்.

இந்த விழாவில், தகுதி வாய்ந்த முன்னாள் ராணுவ வீரர்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்க வேண்டும். மூன்று மாதத்திற்கு ஒருமுறை முன்னாள் ராணுவ வீரர்கள் குறை கேட்பு கூட்டம் நடத்திட வேண்டும். மத்திய பாதுகாப்பு அமைச்சகத் தின் கீழ் இயங்கி வரும் கேந்திரிய சைனிக் போர்டின் பரிந்துரையின்படி முப்படை நல வாரியத்திற்கு ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி ஒருவரை நிரந்தர இயக்குநராக நியமிக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# பல பயிர் சாகுபடியாளர்கள் சங்க கூட்டம்



**புதுச்சேரி, நவ. 25-**

கரியமாணிக்கம் ஹோலி பிளவர் மேனிலைப் பள்ளி வளாகத்தில் புதுச்சேரி, தமிழ்நாடு நம்மாழ்வார் இயற்கை உழவர்கள் சங்கம், புதுச்சேரி தமிழ் நாடு நெல் ஜெயராமன் இயற்கை பல பயிர் சாகுபடியாளர்கள் சங்கம் ஒருங்கிணைந்த தலைவர் ராஜ வேணு கோபால் சீரிய தலைமையில் நவம்பர் மாத சங்க கூட்டம் நடைபெற்றது. அது சமயம் விவாதங்களுடன் விளக்கங்களுடன் கீழ்க்கண்ட தீர்மானங்கள் இனிதே நிறைவேற்றப்பட்டன

டிசம்பர் மாத 3ம் வாரத்தில் இருசங்க பொதுக்குழுவினை கூட்டி முறையாக அரசு விதிகளின்படி பிரதேச தலைவர், துணைத் தலைவர், செயலாளர், துணை செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகிய பதவிகளுடன் ஆலோசகர்கள், உயர் மட்ட குழு உறுப்பினர்கள், கொம்யூன் நிர்வாகிகள் என அனைத்து நிர்வாக பதவிகளுக்கு தேர்தல் நடைபெறும் என அனைவரின் ஒப்புதலோடு தீர்மானிக்கப்பட்டது.

சங்க நிர்வாகிகள் புதுச்சேரி பிரதேசம் முழுவதும் உள்ள அனைத்து கிராமங்களிலும் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண் பயிற்சி கள் வழங்கி மத்திய, மாநில அரசுகள் உதவியுடன் வேளாண் துறை ஒத்துழைப்புடன் இயற்கை மாநிலமாக மாற்றம் செய்திட மத்திய அரசின் இயற்கை வேளாண்மை நிதியினை சங்கத்தின் மூலம் அனைத்து விவசாயிகளும் பயன் பெறும் வகையில் வீரியமாக செயல்படுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

புதுச்சேரி வேளாண் துறை மூலம் உயர் சக்தி உயிராற்றல் வேளாண்மைக்கு வளு சேர்க்கும் வகையில் பயிற்சியாளர்களை கொண்டு பயிற்சிகள் வழங்கிட வற்புறுத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

அனைத்து கொம்யூன் இயற்கை உழவர்களை ஒருங்கிணைத்து பாரம்பரிய விதைகள் உற்பத்தி செய்து வேளாண் துறைக்கும் விவசாயிகளுக்கும் வழங்கி உற்பத்தியை பெருக்குவது என தீர்மானிக்கப்பட்டது.

மாநில அரசின், மற்றும் வேளாண் துறையின் செயல்பாடுகள் இயற்கை விவசாயிகளுக்கு பல வருடங்களாக பயனளிக்காத காரணத்தை சுட்டி காட்டி கண்டன ஆர்ப்பாட்டம் சுதேசி மில் எதிரில் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது.

மத்திய அரசு வழங்கும் இயற்கை விவசாயத்திற்கான நிதியினை பாரம்பரிய ரகங்கள் சாகுபடி செய்யாத விவசாயிகளை கள ஆய்வு செய்யாமலேயே வழங்கி உண்மையான இயற்கை விவசாயிகளை ஒட்டு மொத்தமாக உதாசீனம் செய்வதை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு பின்னர் கவன ஈர்ப்பு பேரணி நடத்தி துணை நிலை ஆளுநருக்கு புதுச்சேரி தமிழ்நாடு நம்மாழ்வார் இயற்கை உழவர்கள் சங்கம் சார்பாக செயலாக்க குறைபாடுகள் குறித்து விரிவான அறிக்கை மனுவாக வழங்குவது என தீர்மானிக்கப்பட்டது .

புதுச்சேரி மாநிலத்தில் அண்டை மாநிலங்களைப் போல் ஆண்டு தோறும் இயற்கை வேளாண்மைக்கு வளு சேர்க்கும் வகையில் விரைவாக மேம்படுத்த விருதுகளுடன் ஊக்க தொகை வழங்கி கௌரவப் படுத்திட கேட்டுக்கொள்வது என தீர்மானிக்கப்பட்டது.

இதில் சங்க பொருளாளர் நாராயணசாமி, வெங்கிடேசன் நெட்டபாக்கம் கொம்யூன் நிர்வாகி, சங்க துணை தலைவர் வெங்கடாசலம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# வில்லிசேரி கிராமத்தில் சிறப்பு கிராம சபை கூட்டம்



கயத்தாறு, நவ. 25-

தூத்துக்குடி மாவட்டம் வில்லிசேரி கிராமத்தில் வடகிழக்கு பருவமழை முன்னிட்டு வில்லிசேரி கிராமத்தில் ஊர் பொது இடத்தில் மரத்தடியில் சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. இந்த கிராம சபை கூட்டத்திற்கு பஞ்சாயத்து தலைவர் வேலன் தலைமை வகித்தார். கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய சாலை ஆய்வாளர் வீரலட்சுமி பற்றாளராக முக்கிய தீர்மானங்களை வாசித்தார்.

மக்கள் கூறும் கோரிக்கைகளை பஞ்சாயத்து துணைத்தலைவர் காசிராஜன் முன்னிலை வகித்து முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றப்பட்டன. இந்தக் கூட்டத்தில் வில்லிசேரி பஞ்சாயத்தில் தூய்மை பணியாளர்களாக பணிபுரியும் 10 பேருக்கு பஞ்சாயத்து தலைவர் வேலன்மற்றும் துணைத் தலைவர் காசிராஜன் ஆகியோர் பொன்னாடைகளை போர்த்தி கௌரவப்படுத்தினர். மழைக் காலத்தில் சிறப்பாக செயல்பட்ட தூய்மை பணியாளர்களை பாராட்டியும், அவர்களுக்கு சான்றிதழ் வழங்கியும் கவரப்படுத்தினர். இந்த கிராமச கூட்டத்தில் அரசு மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் சிலுவை அந்தோணிமுத்து, வேளாண் துறை அலுவலர் பாலமுருகன், ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி ஆசிரியை ரேணுகாதேவி, ஊராட்சி மன்ற கவுன்சிலர் ராஜகலா, ஊராட்சி செயலர் சரவணபாண்டியன் மற்றும் பிரதம மந்திரி தேசிய ஊரக வேலை பணித்திட்டத்தின் பணித்தளபொறுப்பாளர் காஞ்சனா, மகளிர் குழு தலைவி சரளா உள்பட பலரும் கலந்து கொண்டனர். இதில் 300க்கும் மேற்பட்ட ஆண்கள் பெண்களும் கலந்துகொண்டு முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றினர். இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் பஞ்சாயத்து பணியாளர்கள் செய்திருந்தனர்.

# செம்மார் கிராமத்தில் சிறப்பு கிராம சபை கூட்டம்




திருவெண்ணெய்நல்லூர், நவ. 25-

திருவெண்ணெய்நல்லூர் அருகே செம்மார் கிராமத்தில் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு சிறப்பு கிராம கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் பழனி தலைமை தாங்கினார். கூடுதல் ஆட்சியர் ஸ்ருதஞ் ஜெய் நாராயணன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.கௌதம சிகாமணி, பி.டி.ஓ ரவி, பாலசுப்பிரமணியன், மாவட்டச் சேர்மன் ஜெயச்சந்திரன், மாவட்ட கவுன்சிலர் பி.வி.ஆர்.விசுவநாதன், ஒன்றிய சேர்மன் ஓம்சிவசக்திவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி மன்ற தலைவர் ஷீபாராணி ஏழுமலை அனைவரையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக வனத்துறை அமைச்சர் பொன்முடி கலந்து கொண்டு கிராம ஊராட்சியில் சிறப்பாக பணிபுரிந்த ஊழியர்களுக்கு சால்வை அணிவித்து கௌரவித்தார். மேலும் இந்த கிராமத்தில் செயல் படுத்தப்பட்டுள்ள மக்களுக்கான திட்டங்கள் குறித்து எடுத்துக்கூறினார். இதில் அரசு அதிகாரிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், திமுக மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் மற்றும் கிராம பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

## உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு

# கடையம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் ஆசிரம மாணவ, மாணவிகளுக்கு மதிய உணவு



கடையம், நவ. 25-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் மற்றும் திமுக இளைஞரணி மாநில செயலாளர் உதயநிதி ஸ்டாலின் 48வது பிறந்த நாளை முன்னிட்டு கடையம் தெற்கு ஒன்றிய திமுக சார்பில் சிவசைலம் ஔவை ஆசிரமம் மாற்றுத்திறனாளிகள் பள்ளி மாணவ மாணவிகளுக்கு மதிய உணவு 200 மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

கடையம் தெற்கு ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார் தலைமையில் சிவசைலம் ஊராட்சி மன்ற தலைவர் வளர்மதி சங்கர பாண்டியன் முன்னிலையில் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் ஜெயபாலன் கலந்து கொண்டு உணவு வழங்கினார். நிகழ்ச்சியில் அண்ணா தாசன் மாவட்ட பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் பக்கீர் மைதீன், ஒன்றிய அவைத் தலைவர் சுடலைமுத்து, பொருளாளர் வின்சென்ட், துணைச் செயலாளர் சுந்தரி மாரியப்பன், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் பாண்டியராணி, மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் முகமது யாகூப் பொன் செல்வன், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ரமேஷ், அறங்காவலர் குழு தலைவர் மூர்த்தி, புகாரி மீரா சாகிப், வின்சென்ட் பால் ஒன்றிய கவுன்சிலர்கள் புஷ்பராணி, ஜஹாங்கீர், ஒன்றிய நிர்வாகிகள் கணேசன், முருகன், முகமது ஆரிப், அஸ்லிம், ஜெயராஜ், வலைதள பொறுப்பாளர் சுரேஷ், ஆழ்வார்குறிச்சி ஆனந்த், கொமாட்சி தேவ, தொழிலா அணி துணை கருணா, ஜெகதீஸ், முகமது இப்ராகிம் கடையம் வெள்ளத்துரை கிளைச் செயலாளர் அந்தோணிசாமி, முகமது இப்ராஹிம், ஜெயபால், கண்ணன், ரவீந்திரன், சதாம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# இலவச கண் பரிசோதனை முகாம்



சேலம், நவ. 25-

ரோட்டரி சேலம் சென்ட்ரல் மற்றும் தி ஐ பவுண்டேஷன் பேர்லேண்ஸ் சேலம் இணைந்து, மாபெரும் இலவச கண் பரிசோதனை முகாம் பொன்னம்மாப்பேட்டை வீராணம் மெயின் ரோட்டில் உள்ள மாதையன் திருமண மண்டபத்தில் நடத்தினார்கள். இம்முகாமில் ரோட்டரி சேலம் சென்ட்ரல் கிளப் தலைவர் ரொட்டேரியன் ஸ்ரீநாத், செயலாளர் ரொட்டேரியன் குணசேகரன், ஒருங்கிணைப்பாளர் ரொட்டேரியன் மோகன், முன்னாள் தலைவர்கள் ரொட்டேரியன் அருள் முருகன், ரொட்டேரியன் சூரிய நாராயணன் மற்றும் உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர், இந்த இலவச கண் பரிசோதனை முகாமிற்கு சிறப்பு அழைப்பாளராக 9வது கோட்ட மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் தெய்வலிங்கம் கலந்துகொண்டு முகாமை துவக்கி வைத்தார். இதில் திஐ பவுண்டேஷன் மருத்துவர்கள் டாக்டர் ஹரிதா, டாக்டர் சுருதி மற்றும் செவிலியர்கள் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு கண் சம்பந்தப்பட்ட கண் நோய்களுக்கு கண் பரிசோதனை செய்தனர், டாக்டர்கள் பரிசோதனை செய்து கொண்ட பொதுமக்களுக்கு அவரவர் கண் குறைபாடுகளுக்கு தகுந்தார்போல் ஆலோசனை வழங்கினார்கள். இந்த இலவச கண் சிகிச்சை முகாமில் 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

# அலைடு ஹெல்த் சயின்ஸ் துறை சார்பில் ஜன் ஜாதியா கௌரவ் தினம் கடைபிடிப்பு




புதுச்சேரி, நவ. 25-

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பழங்குடியின மக்களின் பங்களிப்பிற்கு வித்திட்டு, தனது சிறந்த பங்களிப்பினை ஆற்றிய பழங்குடியின சுதந்திரப் போராட்ட வீரரான பகவான் பிரிஷா முண்டா பிறந்தநாளினை பழங்குடியினர் பெருமை தினம்(ஜன் ஜாதியா கௌரவ தினம்) என்று மத்திய அரசு அறிவித்தது.

இதனைத் தொடர்ந்து மத்திய அமைச்சகத்தின் விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அமைப்பானது அனைத்து உயர்கல்வி நிறுவனங்களும் இதத்தினத்தை கடைப்பிடித்து இதனை சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துமாறும் வலியுறுத்தியது.

இவ்வலியுறுத்தலின்படி விநாயகா மிஷினின் மிம்ஸ் மருத்துவமனை வளாகத்தில் உள்ள அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையின் நாட்டு நல பணித் திட்ட அமைப்பானது பல்கலைக்கழகத்தின் வேந்தர் டாக்டர் கணேசன் வழிகாட்டுதலின்படி பாரம்பரிய விளையாட்டுப் போட்டியினை கல்லூரி வளாகத்தில் நடத்தியது.

நிகழ்ச்சிக்கு துறையின் பேராசிரியர் டாக்டர் செந்தில்குமார் முன்னிலை வகித்து பாரம்பரிய விளையாட்டுப் போட்டியினை தொடங்கி வைத்தார். இதில் துறையை சேர்ந்த மாணவ, மாணவிகள் ஆர்வமுடன் பங்கேற்று தங்களின் தனித்திறனை வெளிப் படுத்தினர். இதில் சிறப்பாக பங்கேற்றவர்களுக்கும், வெற்றிபெற்றவர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

இதற்கான அனைத்து ஏற்பாட்டினையும் துறையின் நாட்டு நல பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் தனசேகர் மற்றும் டாக்டர் ஜெயபாலன், உடற்பயிற்சி இயக்குனர்கள் முனைவர் ஜெயபாரதி சூர்யா ஆகியோர் செய்து இருந்தனர்

# டைஸ் அன்ட் கெமிக்கல்ஸ் மெர்ச்செண்ட்ஸ் அசோசியேஷனின் 50ம் ஆண்டு பொன் விழா



ஈரோடு டைஸ் அன்ட் கெமிக்கல்ஸ் மெர்ச்செண்ட்ஸ் அசோசியேஷனின் 50ம் ஆண்டு பொன் விழாவில் ராம்ராஜ் காட்டன் நிறுவன தலைவருமான நாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் பிரகாஷ் ஆகியோர் குத்து விளக்கை ஏற்றி தொடங்கி வைத்தனர். உடன் சங்கத்தின் தலைவர் ராஜமாணிக்கம்.

# கிராம சபை கூட்டம்




மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் சங்கீதா தலைமையில் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், புளியங்குளம் ஊராட்சி எல்கேடி நகரில் உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் நடைபெற்றது. அருகில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மோனிகா ரானா. மாவட்ட வருவாய் அலுவலர் சக்திவேல்.

# டெங்கு விழிப்புணர்வு போட்டி



புதுச்சேரி, நவ. 25-

புதுச்சேரி கல்வித் துறை, சுகாதாரத்துறை மற்றும் குழந்தைகள் நலத்துறை, ICMR - VCRC இணைந்து நடத்திய DREAMS-24 என்ற நிகழ்ச்சியில் புதுச்சேரி மாநில அளவில் டெங்கு விழிப்புணர்வு போட்டிகள் அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கு நடத்தப்பட் டது. இதில் சவரிராயலு நாயக்கர் அரசு பெண்கள் தொடக்கப் பள்ளி மாணவி கள் பங்கேற்று, Poster Making போட்டியில் நிரஞ்சனா என்ற மாணவியும், Science Exhibition போட்டியில் வர்ஷினி மற்றும் ஜெயஸ்ரீ என்ற மாணவிகளும் முதல் பரிசினைப் பெற்று பள்ளிக்கு பெருமைச் சேர்த்தனர். பள்ளித் துணை ஆய்வாளர் வட்டம் குணசுந்தரி, பள்ளித் தலைமை ஆசிரியை பத்மாவதி மாணவிகளை வெகுவாக பாராட்டி மகிழ்ந்தனர். வழிகாட்டி ஆசிரியராக வள்ளி மாணவிகளை போட்டிகளுக்கு தயார் செய்தார். மேலும் பள்ளி ஆசிரியர், ஆசிரியைகள் கெஜலட்சுமி, கவிதாதேவி, ரன்ஜனி, சோனியா, கயல்விழி, ஜெயஷர்மா, மதுமதி, பிரசன்னா, பள்ளி ஊழியர்கள் மற்றும் மாணவிகளின் பெற்றோர்கள் போட்டியில் வெற்றிபெற உறுதுணையாக இருந்தனர்.

# கவர்னர் எந்த கோப்புக்கும் தடையாக இல்லை

## அமைச்சர் நமச்சிவாயம் தகவல்



புதுச்சேரி, நவ. 25-

புதுச்சேரி கவர்னர் நியாயமான கோப்புகளுக்கு ஒப்புதல் அளித்து வருகிறார். எந்த கோப்புக்கும் அவர் தடையாக இல்லை என, அமைச்சர் நமச்சிவாயம் பேசினார்.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் அகில இந்திய தொழில்நுட்ப கல்வி குழுமம் சார்பில் 'ஞானகும்பம்' தேசிய கல்வி மாநாடு 22ம் தேதி தொடங்கி நேற்று வரை நடைபெற்றது. இந்த மாநாட்டின் நிறைவு விழாவில் அமைச்சர் நமச்சிவாயம் கலந்து கொண்டார்.

பின்னர், அவர் நிருபர்களிடம் கூறியதாவது, தேசிய கல்விக் கொள்கை தொடர்பாக துணைவேந்தர்கள், பேராசிரியர்கள் பல்வேறு கருத்துக்கள், ஆலோசனைகளை வழங்கியுள்ளனர். முதல்வருக்கும், கவர்னருக்கும் கருத்து மோதல் ஏதுமில்லை. எதனால் முதலமைச்சர் ரங்கசாமி இந்த விழாவில் கலந்துகொள்ளவில்லை என்பதை அவரிடம் தான் கேட்க வேண்டும். ஆயிரம் காரணம் இருக்கலாம்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியையும், பிரதமரின் மக்கள் சேவையாற்றியதன் விளைவாக மகாராஷ்டிராவில் மீண்டும் ஆட்சி அமைத்திருக்கிறோம். அதேபோல் ஜார்கண்ட் மாநிலத்தில் அதிகப்படியான இடங்களை பாஜக பெற்றுள்ளது. நாளுக்கு நாள் பாஜகவின் வளர்ச்சி அதிகரித்து வருகிறது. பாஜகவின் மீது நாட்டு மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். அவர் களுக்கு நன்றி சொல்ல கட மைப்பட்டுள்ளோம். புதுச்சேரி பாஜகவில் பிளவு என்பதே இல்லை. தனி அணி யாக செயல்படுகிறார்களா என்பதனை சம்பந்தப்பட்ட எம்.எல்.ஏ.,க்களிடம் தான் கேட்க வேண்டும்.

நியாயமான கோப்பு களுக்கு கவர்னர் ஒப்புதல் அளித்து கொண்டிருக்கிறார். எந்த கோப்புக்கும் அவர் தடையாக இல்லை. ஆளும் அரசும், கவர்னரும் இணக்கமாகவே இருக்கிறார்கள். இருவரும் ஒத்த கருத்தோடு மக்கள் சேவை ஆற்றி வருகின்றனர்.

என்.ஆர்.ஐ., இடஒதுக்கீட்டில் தவறு நடந்திருந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி எங்கள் ஆட்சியின் மீது குறை சொல்லாவிட்டால்தான் ஆச்சரியம். மக்கள் மத்தியில் பொய் தகவல்களை பரப்பி, அரசியல் ஆதாயம் தேடப் பார்க்கிறார். எத்தகைய விசாரணையாக இருந்தாலும் இந்த அரசு சந்திக்கும். அவர்கள் ஆட்சிக்கு வரும்போது ஊழல்வாதிகளை சிறையில் தள்ளட்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில் கிராம சபை கூட்டங்கள்



மதுரை, நவ. 25-

உள்ளாட்சி தினத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும் அனைத்து ஊராட்சிகளிலும் கிராம சபை கூட்டம் நடைபெற்றது.

அதன் ஒரு பகுதியாக திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம் சிலைமான், சாமநத்தம் மற்றும் திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் கொந்தகை, காஞ்சிரங்குளம் உள்ளிட்ட ஊராட்சிகளில் கிராம சபை கூட்டம் ஊராட்சி மன்ற தலைவர்கள் சையத் அலிபாத்திமா சாகுல்ஹமீது, ராஜலட்சுமி அழகர்சாமி, தீபாஜெயவேல், மல்லிகா ராஜாமணி, ஆகியோர் தலைமையில் ஊராட்சி மன்ற துணைத் தலைவர்கள் ஜுனைதாபேகம், தனசேகரபாண்டியன், அய்யம்மாள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொது நிதி செலவீனம் 2024- 25ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட பணிகள் கிராம ஊராட்சியின் தணிக்கை அறிக்கை தூய்மையான குடிநீர் வழங்குவதை உறுதி செய்தல் ஜல் ஜீவன் இயக்கம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் உள்ளிட்டவை குறித்து பேசப்பட்டது.

இந்த கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் நடைபெற்றப்பட்டன. இதில் ஒன்றிய கவுன்சிலர் ஜெயக்குமார், ஊராட்சி செயலாளர் சுரேஷ், கண்ணன், பாண்டுரங்கன், ரஞ்சிதா மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், வருவாய் ஆய்வாளர் வார்டு உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# காரைக்காலில் கஞ்சா கடத்திய 8 பேர் கைது



காரைக்கால், நவ. 25-

காரைக்காலில் 260 கிராம் கஞ்சா பொட்டலங்களோடு நின்ற 8 பேரை நிரவி போலீசார் கைது செய்து, கஞ்சா பொட்டலங்கள், செல்போன் மற்றும் பணத்தை பறிமுதல் செய்தனர்.

காரைக்காலை அடுத்த நிரவி காவல் நிலைய சப் இன்ஸ்பெக்டர் செந்தில்குமார் மற்றும் போலீஸ் சாருக்கு வந்த ரகசிய தகவலை அடுத்து, காரைக்கால், நிரவி மெயின் ரோடு தனியார் ஓட்டல் அருகில், நின்ற 8 பேரை போலீசார் நெருங்கிய போது, அவர்கள் தப்பி ஓட முயற்சித்தனர். தொடர்ந்து போலீசார் அவர்களை விரட்டி பிடித்து சோதனை செய்தபோது, இளைஞர்களுக்கு விற்பதற்காக கஞ்சா பொட்டலங்களை பதுக்கி வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

தொடர் விசாரணையில், காரைக்கால் தருமபுரத்தை சேர்ந்த கிருத்திக் ரோஷன் (19), கிருஷ்ணகுமார் (21), கருக்களாச்சேரியை சேர்ந்த ஆதில் (27), புதுத்துறையை சேர்ந்த ரஃபீக் (18), திருப்பட்டினத்தை சேர்ந்த சாகுல் அகமது (23 ), ஹாரூன் இஸ்மாயில் (19), காரைக்கால் பாரதியார் மெயின் ரோட்டை சேர்ந்த அந்தோணி புரூட்ஸ் ராஜா (24), நெடுங்காடு செருமா விலங்கையை சேர்ந்த ஷகில் (19 ) ஆகியோர் என்பது தெரியவந்தது. தொடர்ந்து அவர்களை சோதனை செய்ததில் 8 நபரிடம் 260 கிராம் கஞ்சா பொட்டலங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. தொடர்ந்து எட்டு பேரையும் கைது செய்து கஞ்சா பொட்டலங்கள், 7 செல்போன்கள் மற்றும் ரூபாய் 7500 பணம் பறிமுதல் செய்யப்பட்டு, காரைக்கால் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு கிளை சிறையில் அடைக்கப்பட்டனர்.

# புதுவையில் மகான் அரவிந்தர் சித்தி தினம்



புதுச்சேரி, நவ. 25-

புதுவை அரவிந்தர் ஆசிரமத்தில் 98வது ஆண்டு நிறுவன தினத்தையொட்டி, நேற்று அரவிந்தர் அறையை நீண்ட வரிசையில் காத்திருந்து பக்தர்கள் தரிசனம் செய்தனர். புதுச்சேரி, மரைன் வீதியில் உள்ள அரவிந்தர் ஆசிரமத்தில் தங்கி இருந்த அரவிந்தர் 1926ம் ஆண்டு நவம்பர் 24ம் தேதி பொன்னொளி பூமிக்கு வந்ததை உணர்ந்து, அதன் பின் ஆன்மிகப் பணிகளில் ஈடுபட்டார். இதனையடுத்து அந்த நாள் ஆசிரமம் நிறுவன தினமாக அறியப்பட்டு, ஆண்டுதோறும் நவம்பர் 24ம்தேதி சித்தி தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அதன்படி 98ம் ஆண்டு சித்தி தினம் நேற்று அரவிந்தர் ஆசிரமத்தில் கடைபிடிக்கப்பட்டது.

இதையொட்டி காலை 6 மணிக்கு ஆசிரம உறுப்பினர்களின் கூட்டு தியானம் நடந்தது. தொடர்ந்து மகான் அரவிந்தர் வாழ்ந்த அறை மட்டும் பக்தர்களின் தரிசனத்திற்காக மதியம் 12 மணி வரை திறந்து வைக்கப்பட்டது. இதில் உள்ளூர், வெளியூர் பக்தர்கள் மட்டுமல்லாது வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்டோர் நீண்ட வரிசையில் காத்திருந்து அரவிந்தரின் அறையை பார்வையிட்டு தரிசனம் செய்தனர்.

# நலத்திட்ட உதவி வழங்கல்



மதுரை, நவ. 25-

வைகை ஆற்றை அழகுபடுத்துதல், ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குதல், அரசு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள், பார்வையாளர்களுக்கு உணவு வழங்குதல் உள்ளிட்ட தொண்டுகளை செய்து வருகிறது. அந்த வகையில் மதுரை ஒத்தக்கடை பகுதியில் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு 10 கிலோ அரிசி, மளிகை பொருட்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை நட்சத்திர நண்பர்கள் அறக்கட்டளை சார்பாக நிறுவனர் குவைத் குருசாமி வழங்கினார்.

# செஞ்சி டிஎஸ்பி பொறுப்பேற்பு



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி காவல் துணை கண்காணிப்பாளராக கார்த்திகா பிரியா பொறுப்பு ஏற்றுக்கொண்டார்.

# அருணை ஆங்கில மேல்நிலை பள்ளியில் அறிவியல் கண்காட்சி



நெட்டப்பாக்கம், நவ. 25-

கரிக்கலாம்பாக்கம் அருணை ஆங்கில மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் கைவினை கண்காட்சி நடந்தது. கண்காட்சியை தனியார் பள்ளி கூட்டமைப்பு சங்க துணை தலைவர் அழகேசன், பொருளாளர் மோகன்தாஸ், இணை பொருளாளர் மாணிக்கம், பள்ளி முதல்வர் சந்தானம் ஆகியோர் துவக்கி வைத்தனர். கண்காட்சியில் பள்ளி மாணவர்களின் நூற்றுக்கும் மேற்பட்ட அறிவியல் படைப்புகள் காட்சிக்கு வைக்கப்பட்டன. குறிப்பாக மருத்துவ தாவரங்கள், ரோபோக்கள், ராக்கெட் லான்ஞ்சர், பாரம்பரியும் உணவு வகைகள், 3டி தொழில்நுட்ப பொருட்கள், ஜி.எஸ்.எல்.வி., மாதி ஏவுகனை ஆகிய படைப்புகள் கண்களை கவரம் வகையில் அமைந்திருந்தது. சிறந்த படைப்புகள் வழங்கிய மாணவர்களுக்கு பள்ளி முதல்வர் சந்தானம் பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார். கண்காட்சியை பெற்றோர்கள், மாணவர்கள் பார்வையிட்டனர். ஏற்பாடுகளை பள்ளி துணை முதல்வர் கலைவேந்தன், மேலாளர் தமிழ் சந்தானம் ஆகியோர் செய்திருந்தனர்.

# விழிப்புணர்வு பேரணி



மதுரை புதுராமநாதபுரம் சாலையில் உள்ள அமலி பதின்ம மேல்நிலைப்பள்ளி நாட்டு நல பணி திட்ட சிறப்பு முகாமின் 3ம் நாள் நிகழ்வில் "போதையினால் வழிமாற்றும் பாதை" என்ற தலைப்பில் போதை விழிப்புணர்வு பேரணி தங்கமணி போக்குவரத்து காவல் ஆய்வாளர் முன்னிலையில் விரகனூர் பகுதியில் நடை பெற்றது. இதில் மாணவர்கள் போதைக்கு எதிராக பதாகைகளை ஏந்தியபடி பேரணியாக சென்றனர்.

# காரைக்காலுக்கு ஆரஞ்சு அலர்ட் : முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து கலெக்டர் அலுவலகத்தில் ஆலோசனை



காரைக்கால், நவ. 25-

காரைக்காலுக்கு இன்று முதல் கனமழை தொடர்பாக ஆரஞ்சு அலர்ட் விடுக்கப் பட்டுள்ளதால், முன்னெச் சரிக்கை நடவடிக்கை குறித்து கலெக்டர் அலுவலகத்தில் ஆலோசனை கூட்டம் நேற்று இரவு மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற் றது. வங்கக்கடலில் உருவாகி யுள்ள காற்றழுத்தம் காரைக் ால் மாவட்டத்தை மையமா கக் கொண்டு காற்றழுத்த தாழ்வு மண்டலமானது நகரும் என்பதால், மாவட்டத் திற்கு அடுத்த 4 நாட்களுக்கு ஆரஞ்சு அலர்ட் விடுக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து கனமழைக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்தான அவசர ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று இரவு நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் மணிகண்டன் தலைமை தாங்கினார். புதுச்சேரி குடிமை பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் பிஆர்என் திருமுருகன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் காரைக்கால் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாஜிம், நிரவி திரு.பட்டினம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நாக தியாகராஜன், மாவட்ட சீனியர் போலீஸ் சூப்பிரண்டு லட்சுமி சவுஜன்யா, துணை கலெக்டர்கள் அர்ஜுன் ராமகிருஷ்ணன் (வருவாய்), வெங்கடகிருஷ்ணன் (பேரிடர் மேலாண்மை), போலீஸ் சூப்பிரண்ட் சுப்பிரமணியன் (தெற்கு), இந்திய கடலோர காவல் படை அதிகாரிகள், மாவட்ட பேரிடர் மீட்பு படை மற்றும் அனைத்து துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் கலெக்டர் மணிகண் டன் பேசியதாவது: வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு பகுதி, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்று உள்ளதால், காரைக்கால் மாவட்டத் தில் கன மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் ஆரஞ்சு அலர்ட் விடுத்துள்ளது. மேலும் 5 மணி நேரம் தொடர்ந்து கனமழை பெய்யும் என எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. இதன் காரணமாக மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய நிலையில் உள்ள தால், பேரிடர் கால நடவடிக்கைக ளில் ஓஎன்ஜிசி மற்றும் காரைக்கால் தனியார் துறைமுக நிறுவனங்கள் தாமாக முன்வந்து மாவட்ட நிர்வாகத்திற்கு உதவுவ துடன் பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்க முன் வந்துள்ளது. மேலும் மாவட்ட நிர்வாகம் சார்பில் ஏற்கனவே பல் வேறு பேரிடர் கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. 25ஆம் தேதி காலை 8 மணிக்கு பின்பு திடீரென கனமழை பெய்யும் மற்றும் மிக கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்த துடன் அடுத்த மூன்று நாட்களுக்கு மழை தொடரும் எனவும் குறைந்த காற்ற ழுத்த தாழ்வு பகுதியின் மையக்கரு பகுதி காரைக்காலில் நோக்கி நகரும் எனவும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் பொதுமக்களை பாதுகாப்பதற்கு இந்திய கடலோர காவல் படை, மாவட்ட பேரிடர் மீட்பு படை மற்றும் ஆப்த்தமித்ரா தன்னார்வலர்கள் தயார் நிலையில் உள்ளனர். மிக கனமழை பெய்யும் என்பதால் மழைநீர் குடியிருப்பு பகுதியில் தேங்காமல் இருப்பதற்கு மாவட்டத்தில் உள்ள பிரதான வடிகால்கள் மற்றும் வாய்க்கால்களை தூர்வாரப்பட்டுள்ளது. பேரிடர் காலங்களில் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் முகாம்களில் தங்க வைக்கும் போது அவர்களுக்கு உணவு வழங்குவதற்காக தாசில்தார்களுக்கு தலா ரூ.2 லட்சம் நிதி உடனடியாக வழங்கவும், மேலும் வீட்டில் வசிக்கும் பொதுமக்களுக்கு உணவுகளை அவரவர் வீடுகளில் சென்று விநியோகம் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. அவசர காலத்திற்கு தண்ணீரை உடனடியாக வடிகட்டுவதற்கு ஜேசிபி இயந்திரங் களை தயார் நிலையில் வைக்கப்ப ட்டுள்ளது. பொதுமக்களை மீட்பதற்கு மாவட்டத்தில் 60 ஆத்மித்ரா தன்னார்வலர்கள் மற்றும் குடிமை பாதுகாப்பு படையை சேர்ந்த 60 தன்னார்வலர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் தயார் நிலையில் உள்ளனர். மேலும் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் மக்கள் பாதிக்கக்கூடிய இடங்கள் கண்டறியப்பட்டு அந்த இடங்களில் மாவட்ட நிர்வாகம் சார்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. மேலும் அவசர தேவைக்கு மாவட்ட கலெக்டர் அலுவலகத்தை அணுகும்படி பொதுமக்களை மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொள்கிறது என்றார்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
● திங்கள் ● நவம்பர் 25, 2024
மாலை எக்ஸ்பிரஸ்

## யானை தாக்கி உயிரிழந்த பாகன் குடும்பத்துக்கு நிதி



இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் சேகர் பாபு திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் யானை தாக்கியதில் உயிரிழந்த யானை பாகனின் உறவினர் சிசுபாலன் குடும்பத்திற்கு முதலமைச்சர் பொதுநலநிதி ரூ.2 லட்சம், அறங்காவலர் குழுத் தலைவர் வழங்கிய ரூ.3 லட்சம் என மொத்தம் ரூ.5 லட்சத்திற்கான காசோலையினை வழங்கி ஆறுதல் கூறினார். உடன் இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் ஸ்ரீதர்.

## சுகாதார நிலையத்தில் ஆட்சியர் ஆய்வு



கன்னியாகுமரி மாவட்டம் கொட்டாரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## காங்கிரஸ் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்



**சுவாமிமலை, நவ. 25-**

கும்பகோணத்தில் தஞ்சை வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் உட்கட்டமைப்பை பலப்படுத்தும் வகையில் தஞ்சை வடக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் டி ஆர் லோகநாதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் சுதா கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இந்த கூட்டத்தில் மாநில துணை தலைவர் குலாம் மைதீன், மாநில பொதுச்செயலாளர் கனி வண்ணன், பட்டுக்கோட்டை ராஜேந்திரன், எஸ்எஸிஎஸ்எஸ் பிரிவு மாநில செயலாளர் செந்தமிழ் செல்வன், மாநகர காங்கிரஸ் தலைவர் மிர்ஸாதின், மாநகர மேயர் சரவணன், மாநில பொதுக்குழு உறுப்பினர் மாநகர பொருளாளரும் தியாகராஜன், தண்டாளம் சரவணன், வட்டார தலைவர்கள் மணிகண்டன், சிவஞானம், மணிசங்கர், சுந்தர் ராஜன், அசோக், கண்ணன், நாகேந்திரன் ,ராஜலிங்கம், முத்து, கிருஷ்ணன், பன்னிர் டி கேவி சேகர், சோழபுரம் மணி செல்வம், திருஞான சம்பந்தம் ஆகியோர் கலந்துகொண்டனர். கும்பகோணம் சட்டமன்றத் தொகுதி காங்கிரஸ் தலைவர் சேகர் நன்றி கூறினார்.

## வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம்



இந்தியத் தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, சிறப்பு சுருக்கமுறை திருத்தம் 2025ஐ முன்னிட்டு, புதுக்கோட்டை மாவட்டம் ஒன்றியம், பெருங்களூர் அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி வாக்குச்சாவடியில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாமினை மாவட்ட தேர்தல் அலுவலர் அருணா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## திருமண மண்டபம் கட்டும் இடத்தில் அமைச்சர் ஆய்வு



பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியம், பழையனூர் ஊராட்சியில் திருமண மண்டபம் கட்டும் இடத்தினை ஆய்வு செய்தார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் பாஸ்கர பாண்டியன், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணாதுரை.

## வாசக்டமி விழிப்புணர்வு பிரச்சார ரதத்தை துவக்கி வைத்த ஆட்சியர்




தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஆண்களுக்கான நவீன வாசக்டமி இருவார விழிப்புணர்வுப் பிரச்சார ரதத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் கொடியசைத்து துவக்கி வைத்தார். அருகில் தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் சிவக்குமார்.

## காரைக்காலில் ஒரு நாள் கலெக்டராக பணியாற்ற 4 பள்ளி மாணவர்கள் தேர்வு

**காரைக்கால், நவ. 25-**

காரைக்காலில் ஒரு நாள் மாவட்ட கலெக்டராக பணியாற்ற, 4 பள்ளி மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர்கள், வரும் 26ந் தேதி கலெக்டருடன் இணைந்து பணியாற்றுவார். என கலெக்டர் அலுவலக செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

காரைக்கால் மாவட்ட கலெக்டரின் செயலர் பொன்.பாஸ்கர் இதுகுறித்து வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது: காரைக்கால் மாவட்ட கலெக்டர் மணிகண்டன், கடந்த சில மாதங்களுக்கு முன்பு நிருபர்களுக்கு பேட்டி அளிக்கும் போது, பள்ளி மாணாக்கர்கள் மாவட்ட நிர்வாக செயல்பாடுகள், பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல் மற்றும் வளர்ச்சி திட்ட செயல்பாடுகளை நேரடியாக அறிந்து கொள்ளும் வகையிலும், எதிர்காலத்தில் மாணாக்கர்கள் சிறந்த குடிமக்களாக விளங்கவும், சிறந்த மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒருநாள் மாவட்ட கலெக்டராக, மாவட்ட கலெக்டருடன் இணைந்து பணியாற்ற வாய்ப்பு தரப்படும் என அறிவித்திருந்தார். அந்த வகையில் அந்த அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, காரைக்காலில் இதுவரை 10க்கு மேற்பட்ட பல்வேறு அரசு பள்ளி மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, ஒரு நாள் கலெக்டராக பணியாற்றியுள்ளனர். அந்த வரிசையில், காரைக்காலை அடுத்த திரு.பட்டினம் பெண்கள் அரசு உயர்நிலைப்பள்ளி 9ம் வகுப்பு மாணவி கோ.சாதனா, அம்பகர்த்தூர் திருவள்ளுவர் அரசு மேல்நிலைப்பள்ளி 10ம் வகுப்பு மாணவி அஸ்கார பர்சானா, ஜவஹர் நவோதயா வித்யாலாயா 11ம் வகுப்பு மாணவி செ.வித்யா மற்றும் நிரவி கமாலியா மேல்நிலைப்பள்ளி 9ம் வகுப்பு மாணவி இ.வர்ஷ்னி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள், வரும் 26ந் தேதி கலெக்டருடன் இணைந்து பணியாற்று வார். என, மாவட்ட கலெக்டரின் செயலர் பொன்.பாஸ்கர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறப்பட்டுள்ளது.


## வாக்காளர் பட்டியல் திருத்தப்பணி முகாம்



தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் வட்டம் வீரபாண்டிய பட்டணத்தில் உள்ள புனித தோமையார் மேல்நிலைப்பள்ளியில் வரைவு வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தப்பணி முகாம் நடைபெற்றுவருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் இளம்பகவத் பார்வையிட்டார்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007

# எதிர்க்கட்சிகள் கடும் அமளியால் நாடாளுமன்ற இரு அவைகள் ஒத்திவைப்பு



# மழையை எதிர்கொள்ள அரசு தயார்–மு.க.ஸ்டாலின்

# கனமழை எச்சரிக்கை: துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்


# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 25-11-2024 திங்கள்கிழமை •வெளியூர்: 26-11-2024 செவ்வாய்க்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்